Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No. C-04/2021 02-02-2021

# பாலர் சபை நாள் 14.02.2021

# ஆயரின் சுற்றுமடல்

அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, இறைமக்களே, மழலைச் செல்வங்களே! இனிமை பொங்கும் இந்த நல்ல நாளில் உங்கள் அனைவருக்கும் பாலர் சபை தின நல்வாழ்த்துகளை கூறுவதில் உளம் மகிழ்கின்றேன்.

“குழந்தைகளைக் கொண்டாடுவோம்! ஏனெனில் அவர்கள் இவ்வுலகின் தேவதைகள்; இறைமொழி பேசும் இனியவர்கள். அவர்களை இதமாகக் கையாள வேண்டும்” என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். குழந்தைகளுக்கு என வாங்கிக் கொடுக்கும் விதவிதமான விளையாட்டுப் பொருட்கள், சொத்து சேமிப்புகள், கல்விப் பட்டங்களைவிட மேலானது பெற்றோரின் உடனிருப்பும், பாசமும் என்பதை உணரக்கூடிய காலச்சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

“புத்தகங்களே! குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள்” என்ற குரல் காற்றில் தேய்ந்து நமது காதுகளில் புத்தகக்கல்வியை விட குழந்தைகளுக்கு மறைக்கல்வியை வாழ்வியல் பாடமாக்கப்பட வேண்டிய ஓர் அவசர நிலையை உணர்த்துகிறது. தொலைக்காட்சி, அலைபேசி என்னும் ஊடகங்களில் காணாமல்போன குழந்தைகளைத் தேட வேண்டிய ஒரு பரிதாபமான நிலைக்கு நாம் உள்ளாகி இருக்கிறோம். எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன்னுடைய “அன்பின் மகிழ்ச்சி” (Amoris Laetitia) என்ற திருத்தூது மடலில் “உங்கள் குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள்?” என்ற கேள்வியை எழுப்புகிறார். அதற்கான பதிலைத் தேடுவோம்

## நமது மறைமாவட்டமும் குழந்தைகளும்

நமது மறைமாவட்டம் குழந்தைகளின் வளர்ச்சியில் முழு அக்கறைக் கொண்டுள்ளது. குழந்தைகள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள் பல. அவைகளில் இருந்து தன்னம்பிக்கையுடன் எழுந்து நடைபோட வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது. குழந்தைகள் மாண்புடன் வளரவேண்டும் என்ற நோக்கத்தில் “குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை” தாரக மந்திரமாகக் கொண்டு 1997-ஆம் ஆண்டு நமது முன்னாள் ஆயர் மேதகு லியோன் அ. தர்மராஜ் அவர்களால் சிறார்பணிக்குழு ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு சவால்களை சந்தித்து, சிறார்களை ஒருங்கிணைத்து, பல மைல்கல்களைக் கடந்து, கடந்த 25 ஆண்டுகளாக இப்பணிக்குழு வெற்றிநடை போடுகிறது. இதற்கென உழைத்த/உழைக்கின்ற அத்தனை சிறார்பணிக்குழுவின் முன்னாள்/இன்னாள் மறைமாவட்ட செயலர்கள், வட்டார இயக்குநர்கள், களப்பணியாளர்கள், கருத்தாளர்கள் என அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இவர்களின் உழைப்பினால் செதுக்கப்பட்ட நமது மறைமாவட்ட சிறார்கள் தலைமைப்பண்பு, ஒழுக்கம், கீழ்ப்படிதல், உதவி செய்தல் போன்ற உயர்ந்த பண்புகளினால் மிளிர்கின்றனர். இனிவரும் காலங்களிலும் சிறார்களைத் தன்னம்பிக்கையுடன் நடைபோட செய்யும் நல்ல விதைகளை விதைத்து அவர்கள் விருட்சமாக வளர என்றும் உடனிருப்போம். குழந்தைகளைக் குழந்தைகளாக வளர விட்டால் பின்னாளில் அவர்கள் மாமனிதர்களாவார்கள். இறையாட்சியின் முன்படிவங்களே குழந்தைகள். அந்தத் தன்மையை இழக்காமல் பாதுகாப்புடன் குழந்தைகளை வழிநடத்த முற்படுவோம்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

+ **நசரேன் சூசை**
கோட்டாறு ஆயர்

---

குறிப்பு:

1. இச்சுற்றுமடல் 07-02-2021, ஞாயிறு திருப்பலியில் நமது மறைமாவட்ட ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.
2. 14-02-2021 ஞாயிறு பாலர்சபைக்கான சிறப்புக் காணிக்கைப் பெற்று மறைமாவட்டத்தில் ஒப்படைக்க வேண்டும்.

# திருவிவிலியத்தில் குழந்தைகள்

## பழைய ஏற்பாட்டில்

குழந்தைகள் கடவுளின் மிக உயர்ந்த கொடைகளாகவும் கடவுளின் ஆசி எனவும் கருதப்பட்டது. மேலும், அது கடவுளின் உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதாகவும் உணரப்பட்டது. அதிக மக்களைக் கொண்ட குடும்பம் போற்றப்படும் ஒன்றாகக் கருதப்பட்டது. (திபா 128:3-4). முதல் குழந்தையைக் கடவுளுக்கு நன்றி காணிக்கையாக அர்ப்பணித்ததும், ஈடாக ஏதாவது அர்ப்பணப்பொருளைக் காணிக்கையாக்கிவிட்டு குழந்தையை வீட்டுக்கு அழைத்து வருவதும், சில பெற்றோர் காணிக்கையாக்கப்பட்ட தங்கள் குழந்தைகளைக் கோவிலிலே அங்குள்ள குருக்களின் பொறுப்பில் விட்டுவிட்ட நிகழ்வுகளும் உள்ளன (1 சாமு 1:24-28, 2:11).

## புதிய ஏற்பாட்டில்

குழந்தைகளை அன்புடன் அரவணைத்தவர் இயேசு. எளிய மனம் கொண்ட குழந்தைகளுக்கு இறைத்தந்தை மறைப்பொருளை வெளிப்படுத்துகிறார் என்றும் (மத்:11:25) சிறுபிள்ளைகளை ஏற்றுக்கொள்வது தன்னையே ஏற்றுக்கொள்வதற்குச் சமம் என்றும் கூறுகிறார் (மத்:18:5). மேலும் குழந்தைகளுக்கு இடறலாக இருந்து அவர்களைப் பாவத்தில் விழச்செய்கிறவர்களைக் கடுமையாகச் சாடுகிறார் (மத்:18:5-7). மிக முக்கியமாக இறையாட்சியை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு எடுத்துக்காட்டாக இயேசு குழந்தைகளை முன்னிறுத்துகிறார் (மத்:19:14). இயேசுவின் வாழ்வில் குழந்தைகளுக்கு என்று ஒரு தனி இடம் இருந்தது என்பதை இதிலிருந்து உணர்ந்துக் கொள்ள முடியும்.

## குழந்தைகளும் ஊடகங்களும்

இன்றைய நவீன காலத்தில் வளரிளம் பருவக் குழந்தைகள் இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் தங்கள் நேரத்தை அதிகமாகச் செலவிடுகின்றனர். 13 வயதிலிருந்தே அதிகமான குழந்தைகள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த தொடங்கிவிடுகின்றனர். குழந்தைகளுக்கு இயல்பாக இருக்கும் அதிமிகு ஆர்வமும், தேடல் வேட்கையும், நண்பர்களோடு பெருமை பேச கிடைக்கும் காரணங்களுமே வளரிளம் பருவத்தினரை சமூக ஊடகங்களை நாடித்தேட வைக்கின்றது.

அண்மைக்கால 70 விழுக்காடு ஆய்வு முடிவுகள் ஊடகப் பயன்பாட்டிற்கும் குழந்தைகளின் உடல், உள மற்றும் உறவு சார்ந்த பிரச்சினைகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதுகின்றன. திரைகளுக்கு முன்னால் நிழலிடும் மெய்நிகர் (virtual) உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டு உண்மையான உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத சூழல் உருவாகின்றது. இதனால் நட்பு வட்டங்கள் குறைதல், உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்திடாதிருத்தல், உணர்வுகளை வெளிப்படுத்தாது அழுத்தி வைத்தல், பெற்றோர்களோடும் உடன்பிறந்தாரோடும் அதிகமாக கோபத்தை வெளிப்படுத்துதல், தனிமை நிலை உணர்தல், தற்கொலை எண்ணம் உருவாதல் போன்ற விளைவுகள் உருவாக இவை வழிவகுக்குகின்றன.

## குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள்

உலகச் சுகாதார நிறுவனம் பாலியல் ஒடுக்குமுறைகளை 4 வகையாகப் பிரிக்கிறது. முதலாவது, உடல் ரீதியான ஒடுக்குமுறை. இரண்டாவது, பாலியல் ரீதியான ஒடுக்குமுறை. மூன்றாவது, உணர்ச்சி மற்றும் உளவியல் ரீதியான ஒடுக்குமுறை. நான்காவது, பாலினப் பாகுபாட்டால் குழந்தைகளைப் புறக்கணிப்பது.

மேற்குறிப்பிட்ட ஒடுக்குமுறைகளை மேற்கொள்ள குழந்தைகளுக்கு பெற்றோர்களின் மேலான உடனிருப்பும், கவனிப்பும் எப்போதும் வேண்டும். பாலியல் ஒடுக்குமுறைக்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் கரிசனையுடன் உளநல உதவி அளித்து அவர்களை அப்பாதிப்பிலிருந்து மீட்டெடுத்துப் புதுவாழ்வு கொடுக்க வேண்டும்.

## குழந்தைகளும் அரசுநலத் திட்டங்களும்

குழந்தைகளின் மீது முழு அக்கறைக் கொண்டு குழந்தைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் வளர்ச்சிக்கும், கல்விக் கற்பதற்கும் நம் இந்திய திருநாட்டில் மத்திய, மாநில அரசுகள் அக்கறை எடுத்து பல நலத்திட்டங்கள், சட்டங்கள் மற்றும் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளன. இதில் சில முக்கியமான நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.

1. சைல்டுலைன்-1098 திட்டம்
2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்
3. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
4. குழந்தைகள் தத்தெடுப்புத் திட்டம்

இத்திட்டங்களைப்பற்றிய கூடுதல் தகவல்களை கோட்டாறு சமூகச் சேவை சங்கத்திலிருந்தும் சிறார் பணிக்குழுவிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.